KFA-I-M

# மூன்றாம் இடைப்பருவத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 50

வகுப்பு - மூன்று - ________

நேரம்: 2மணி

| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
|---|---|
| இடம்: | வரிசை எண்: |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** **10 × 1 = 10**

1. ‘வானின் அமுதம்’ - இச்சொல் குறிப்பது ________

அ) அமிழ்தம் ஆ) அமிர்தம் இ) சோறு ஈ) மழைநீர்

2. கணினி ________ வழியே அனைவரையும் இணைக்கிறது.

அ) தகவல் களஞ்சியம் ஆ) செய்தி இ) இணையம் ஈ) கடிதம்

3. காகம் ________ வாழும்.

அ) கூட்டில் ஆ) வீட்டில் இ) புற்றில் ஈ) மண்ணில்

4. கைபேசியுடன் விளையாடிக் கொண்டே இருந்தது ________

அ) அத்தை ஆ) மலர்க்கொடி இ) தம்பி ஈ) அப்பா

5. ‘மழையாகுமே’ - இச்சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது ________

அ) மழை + யாகுமே ஆ) மழையாய் + யாகுமே

இ) மழை + ஆகுமே ஈ) மழையாய் + ஆகுமே

6. ‘என்று + இல்லை’ - இச்சொல்லை சேர்த்து எழுதக் கிடைப்பது ________

அ) என்றில்லை ஆ) என்றும்இல்லை இ) என்றுஇல்லை ஈ) என்றல்லை

7. மரம் + பொந்து - இதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________

அ) மரம்பொந்து ஆ) மரப்பொந்து இ) மரப்பந்து ஈ) மரபொந்து

8. ‘விதம் + விதமாக’ - இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________

அ) விதம்விதமாக ஆ) விதவிதமாக இ) விதமாக ஈ) விவாதமாக

9. முத்துமாலை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) முத்து + மாலை ஆ) முத்து + மலை

இ) முத்தும் + மாலை ஈ) முத்தும் + ஆலை

10. ‘களஞ்சியம்’ என்ற சொல்லின் பொருள் ________

அ) சேமிப்புப் புத்தகம்

ஆ) அளவுக்கதிகமான தானியங்கள் சேமிக்கும் இடம்

இ) நெற்பயிர்

ஈ) வயல் பகுதி

**ஆ) பொருள் கூறுக.** 5 × 1 = 5

11. செம்மை 12. அயர்ந்து 13. பொழியும்

14. பராமரித்தனர் 15. இல்லம்

**இ) பொருத்துக.** 5 × 1 = 5

16. இல்லத்தின் நீரை - மழையாகுமே
17. உயிராய் எண்ண - நிலைத்திட
18. நாடும் வீடும் - வேண்டும்
19. வளமும் நலமும் - சேர்ப்போம்
20. உற்ற துணை - செழிக்கவே

**ஈ) எதிர்ச்சொல் தருக.** 5 × 1 = 5

21. நீதி × 22. இயற்கை × 23. நஷ்டம் ×

24. முரட்டு × 25. கால் ×

**II. ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 × 1 = 5

26. வணிகன், வியாபாரம் செய்துவிட்டு _____________ எடுக்க நினைத்தான்.

27. வணிகன் _____________ அயர்ந்து விட்டான்.

28. வீரனுடைய குதிரையின் _____________ உடைந்து விட்டது.

29. வணிகனின் குதிரை, வீரனின் குதிரையை _____________ உதைத்துத் தள்ளிவிட்டது.

30. _____________ குணம் படைத்த உனக்கு நஷ்ட ஈடு கொடுக்கத் தேவையில்லை.

**ஆ) ஒரு எழுத்தை நீக்கி புதிய சொல் உருவாக்குக.** 10 × 1 = 10

31. தவிப்பு 32. கள்ளம் 33. வளையல் 34. பதக்கம்

35. பாயாசம் 36. வாசகம் 37. கட்டடம் 38. சாளரம்

39. குறட்டை 40. பண்டம்

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

41. வணிகன் எதில் சென்று வியாபாரம் செய்தான்?
42. "காகமும் நாகமும்" கதை உணர்த்தும் நீதி என்ன?
43. தகவல்களை எதன் வழியே எளிமையாகப் பெற முடியும்?
44. மலர்க்கொடியை மாற்றியது யார்?
45. காகத்தின் முட்டைகளைப் பாம்பு என்ன செய்தது?
46. வணிகனின் குதிரை, வீரனின் குதிரையை என்ன செய்தது?
47. கணினியின் பயன்கள் குறித்து இப்பாடலின் வழியே நீ அறிந்து கொண்டவற்றைக் கூறுக.